தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12052026.16

ARTICLES

# தெருக்கூத்தும் பாரதமும்

Street theatre and the Mahabharata

**முனைவர் அ.செந்தாமரைகண்ணன்**[1,*]

[1] உதவிப் பேராசிரியர்இதமிழ்த்துறை, சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரணி. விழுப்புரம் மாவட்டம்– 605651

*** Corresponding author:** முனைவர் அ.செந்தாமரைகண்ணன், senthamaraikannan1981a@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Received: 1 October 2026
Revised: 5 October 2026
Accepted: 9 October 2026

**Article ID**
TIRJTS-2026-0015

**Peer review**
Double-blind peer review

**Keywords**
தெருக்கூத்தும் பாரதமும்
துமிழர்களின் பண்பாடு
கலாச்சாரம்

**ABSTRACT**

“தெருக்கூத்தும் பாரதமும்” என்ற தலைப்பில் ஆய்வு மேற்கோண்டு தலைப்பின் எக்காரணியும் விடுபடாமல் கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரை முழுவதும் இத்தலைப்புத் தொடர்பாக எழுதப்பட்டுள்ளதால் வெளியிலிருந்து சான்றாதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது கட்டுரையில் வரும் தெருக்கூத்துப்பற்றியக் கருத்துக்களும், தெருக்கூத்துக் கலைஞர்கள் கூறும் கதைகளும், பாரதமும் பற்றிய கதைகளும், கருத்துக்களும், தெருக்கூத்தும் பாரதமும் பற்றிய இயல்புகளும,; தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும், முடிவுரையும் அதன் பிறகு தெருக்கூத்தும், பாரதமும் பற்றிய ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**How to cite this article:** முனைவர் அ.செந்தாமரைகண்ணன் (2026). தெருக்கூத்தும் பாரதமும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05).

**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

## ஆய்வுச்சுருக்கம்

“தெருக்கூத்தும் பாரதமும்” என்ற தலைப்பில் ஆய்வு மேற்கோண்டு தலைப்பின் எக்காரணியும் விடுபடாமல் கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரை முழுவதும் இத்தலைப்புத் தொடர்பாக எழுதப்பட்டுள்ளதால் வெளியிலிருந்து சான்றாதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது கட்டுரையில் வரும் தெருக்கூத்துப்பற்றியக் கருத்துக்களும், தெருக்கூத்துக் கலைஞர்கள் கூறும் கதைகளும், பாரதமும் பற்றிய கதைகளும், கருத்துக்களும், தெருக்கூத்தும் பாரதமும் பற்றிய இயல்புகளும,; தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும், முடிவுரையும் அதன் பிறகு

தெருக்கூத்தும், பாரதமும் பற்றிய ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## முன்னுரை

துமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் உலக மக்கள் எல்லோராலும் போற்றக்கூடிய ஒன்று தெருக்கூத்துக்கலை நம்முடைய பண்பாடு, கலாச்சாரத்தை வெளிக்காட்டுவதே கலைகள்தான். கலை என்பது ஒரு நாட்டின் உயிர் நாடி போன்றது. அவற்றில் மிக முக்கியமான கலையாக நிகழ்த்தப்படுவது தெருக்கூத்துக்கலையாகும். தெருவில் நிகழ்த்தப்படுவதால் தெருக்கூத்து எனப்படுகிறது. தெருக்கூத்தில் பெரும்பாலும் மகாபாரதக் கதைகளைதான் நிகழ்த்துவார்கள், 18 நாட்கள் பிரசங்கம் (சொற்பொழிவு) செய்வார்கள், அந்த பதினெட்டு நாட்களில் எட்டு (அ) பத்து நாட்கள் தெருக்கூத்து நடைபெறும். தெருக்கூத்தில் மகாபாரதக்கதைகளைக் கொண்டு நீதிபோதனைகளை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காண்பிக்கிறார்கள். தெருக்கூத்துக்கலை ஒன்று இருக்கிறதென்றால் மகாபாரதத்தால் மட்டுமே எனலாம்.

## தெருக்கூத்து

“தெருக்கூத்து என்பது ஒரு பழங்காலக் கலையாகும் இக்கலையில் கலைஞர்கள் நடனம் மற்றும் இசையுடன் பாடல் பாடிக்கொண்டே ஆடி நிகழ்த்தக்கூடிய கலையாகும். கூத்து என்பது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் அதன் உச்சத்தை அடைந்தது. வெறும் பொழுது போக்கிற்கு அப்பால் சென்று, விழிப்புணர்வுக்கதைகளையும், சீர்த்திருத்தக்கதைகளையும், மகாபாரதம், இராமாயணம் போன்ற மதம் சார்ந்தக் கதைகளையும் தமிழ் மக்களின் வரலாற்றை பற்றிக் கூறுகின்றது.”[1]

“தமிழகத்தின் மிகப்பழமையான அரங்கக்கலை வடிவம் தெருக்கூத்து ஆகும். தெருக்களையே ஆடுகளமாகக் கொண்டு நிகழ்த்தப்படுவதால் தெருக்கூத்து எனப் பெயர் பெற்றது. ஒரு கதையை இசையுடன் பாடியும,; ஆடியும், உரையாடியும் நடித்து நிகழ்த்தப்படும் கலையாக இது திகழ்கின்றது.”[2]

## தெருக்கூத்தின் வகைகள்

1. “வேத்தியல் கூத்து 2. பொதுவியல் கூத்து
2. வசைக்கூத்து 4. வென்றிக்கூத்து
3. விநோதக்கூத்து 6. விதூடக்கூத்து

4. சாந்திக்கூத்து 8. மெய்க்கூத்து
5. அவிநயக்கூத்து 10. இயல்புக்கூத்து
6. துடிக்கூத்து 12. குடக்கூத்து”[3]

என பல்வேறு வகையான கூத்து வடிவங்கள் முற்காலத்தில் இருந்தன.

1. மன்னர்கள் மட்டும் கண்டு களிப்பதற்காக நிகழ்த்தப்பட்டக் கூத்து ‘வேத்தியல் கூத்து’ என்பர்.
2. மக்கள் கண்டு களிப்பதற்காக நிகழ்த்தப்படுகின்றக்கூத்து ‘பொதுவியல் கூத்து’ என்பர்.
3. வசைக்கூத்து என்பது ஒருவரை வசைப்படுத்திக் கூறுதலாகும்.
4. வென்றிக்கூத்து - மாற்றான் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும் காட்டும் கூத்து.
5. விநோதக்கூத்து - வேடிக்கையின் பொருட்டு ஆடப்படும் கூத்து விநோதக்கூத்து எனப்பட்டது. குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என ஆறு வகைப்படும். சிலர் விதூடக் கூத்தினைச் சேர்த்து ஏழு என்பர், சிலர் விதூடக் கூத்தினை நீக்கிவிட்டு, வெறியாட்டினைச் சுட்டி ஏழு என்பர். வெறியாட்டு – தெய்வமேறி ஆடும் ஆடலை வெறியாட்டு என்பர்.
6. குடக்கூத்து - குடக்கூத்தானது தற்காலத்தில் கரகாட்டமாகக் கோவில் விழாக்களில் நிகழ்த்தப்படுகிறது.
7. துடிக்கூத்து - முருகன் சூரபதுமனைக் கொன்று உடுக்கைக்(துடி) கொண்டு ஆடிய ஆடல் இதில் கடலே அரங்கமாகக் கொள்ளப்பட்டது.
8. இயல்புக்கூத்து - இயல்பாக ஆடும் ஆடலை இயல்புக்கூத்து என்றுக் கூறுவர்.
9. விதூடக்கூத்து - இது நகைச்சுவைக் கூத்து, இதனை வசைக்கூத்து என்றும் கூறுவர், இது இந்நாட்களில் கோமாளிக்கூத்து என வழங்கப்படுவதை ஒத்தது.
10. மெய்க்கூத்து - இது அகத்துறை, அகமார்க்கம் எனப்பட்ட ச்ருங்கார ரஸத்தை ஒரு தூக்குத்தூக்கி ஜிவாத்ம-பரமாத்ம ஐக்கியமான நாயக – நாயகி பாவத்தில் ஆடுவது.
11. அபிநயம் - அபிநயம் என்பதே தமிழ் மொழிப் பண்புப்படி அவிநயமாயிருக்கிறது. ச்ருங்காரம் மட்டுமின்றி நவரஸங்களையும் காட்டும் தனிப் பாட்டுக்களுக்கு அபிநயம் செய்துக் காட்டுவது.

12. சாந்திக்கூத்து - சாந்திக்கூத்திலே பலவித ரசனைப் பேதங்கள், உணர்ச்சிப் போராட்டங்கள் இருந்தாலும், முடிந்த முடிவாக அது மனசை சாந்தப்படுத்தவே செய்யும் அதனால்தான் 'சாந்திக் கூத்து' என்று பெயர் பெற்றது.

"வள்ளிக்கூத்து – குறிஞ்சி நில மக்களின் கூத்து வகை. வள்ளிபோல் குறத்தி வேடமிட்டு ஆடும் ஆட்டமாகும்;."[4]

**மகாபாரதம்**

மகாபாரதத்தில் குரு வம்சத்தின் பங்காளிக்கு இடையே நிலத்துக்காக நடைபெற்ற மாபெரும் போர்தான் மகாபாரதப்போர். திருதிராஷ்டிரன் - காந்தாரி தம்பதிக்கு 100 குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்களின் முதல் மகன்; - துரியோதனன் இரண்டாவது மகன் - துச்சாதனன் என் மொத்தம் 100 குழந்தைகள் பிறக்கிறது இவர்களை கௌரவரகள் என அழைக்;கிறார்கள்.

பாண்டு மகாராசாவுக்கும் – குந்திமாதேவி – மாதரி என்ற இருவரையும் மணம் செய்து கொள்கிறார். குந்திக்கு மூன்று ஆண் குழந்தைகள்; - தருமன், பீமன், அர்ச்சுனன், மாதரிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் - நகுலன், சகாதேவன் இந்த ஐவரும் சேர்ந்து பஞ்சப்பாண்டவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

குந்திக்கு ஒரு முனிவர் சில மந்திரங்களைக் கற்றுத் தந்து இருக்கிறார். அந்த மந்திரங்களை உச்சரித்தால் தேவர்கள் அருளால் அவளுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என கூறியுள்ளார். ஆனால் தனக்குத் திருமணம் ஆகும் முன்னரே அவள் இந்த மந்திரங்களை முயற்சிததுப் பார்க்கிறாள். அப்போது ஒரு குழந்தை பிறந்துவிடுகிறது. பயந்துபோன குந்தி அந்;தக் குழந்தையை ஒரு கூடையில் வைத்து ஆற்றில் விட்டுவிடுகிறாள். அந்தக் குழந்தையை ஒரு தேரோட்டி எடுத்து வளர்க்கிறான். அந்தக் குழந்தைதான் கர்ணன். கர்ணனுக்கு நெருக்கிய நண்பனாக இருப்பது துரியோதனன் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் துரோணர் என்ற குரு கலைகளைக் கற்றுக்கொடுக்கிறார்.

பாண்டவர்களும், கௌரவர்களும் அரசாலும் வயதை அடையும்போது பெரியவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தருமருக்கே முடிசூட்டுக்கின்றனர். இது கொளரவர்களுக்கும் கடும் கோபத்தை ஏற்படுத்துக்கிறது. துரியோதனன் அரக்கால் ஆன மாளிகை ஒன்றைக் கட்டி பாண்டவர்ககளை விருந்துக்கு அழைத்து அவர்களை அங்கு தங்க வைக்கிறான். இரவில் அந்த மாளிகையை

எரித்துவிடுகிறான் ஆனால் துரியோதனன் சதித் திட்டததை முன்பே அறிந்த பாண்டவர்கள், தப்பி காட்டுக்குள் சென்றுவிடுகின்றனர். காட்டிலிருக்கும் போது ஒரு சுயம்வரத்தில் அர்ச்சுனன் திரௌபதியை வெல்கிறான், அர்ச்சுணன் அம்மா குந்தியிடம் நான் ஒரு பொருள் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்ல அவள் எதுவாக இருந்தாலும் நீங்கள் ஐவரும் பங்கிட்டுக்கொள் என ஆணையிட ஐந்துபேரும் திரௌபதியை மணக்கின்றனர்.

பாண்டவர்கள் மீண்டும் நாட்டுக்கு வந்து தங்களுக்கான நிலத்தைப் பங்குபோடுமாறு கேட்கின்றனர். அவர்களுக்குக் கிடைத்த காண்டவ வனம் என்ற பகுதியை அழித்து இந்திரப்பிரஸ்தம் என்ற நாடாக மாற்றுகின்றனர். அவர்களது அழகான நாட்டைப் பார்த்து ஆசைப்படும் துரியோதனனுக்கு அவரது தாய் மாமா சகுனி உதவி செய்ய வருகிறார்.

தருமன் ஒரு மாளிகை கட்டுகிறான் அந்த மாளிகைக்கு கௌரவர்களை விருந்துக்கு அழைக்கிறான். அந்த மாளிகைக்கு துரியோதனனும் கௌரவர்கள் 100 பேரும் வந்தார்கள் உள்ளே நுழையும் போது தண்ணீர் இருப்பது போல் தோன்றியதால் அவர் உடையை தூக்கிப் பிடித்து மெதுவாக வந்தார்கள். இதனை மாடியிலிருந்துக் கண்ட திரௌபதி அவர்களைப் பார்த்து சிரித்தாள். இதனால் கோபமடைந்த துரியோதனன் பழிவாங்க அவன் ஒரு மாளிகைக் கட்டி விருந்துக்கு அழைத்தான். விருந்தில் பொழுதுபோக்குக்காக சூதாட அழைத்தான். சூதாட்டத்தில் சதியால் தருமர் வரிசையாக தோற்று தன் நாடு, சொத்து, மாளிகை, அத்துடன் நில்லாமல் தன் தம்பிகள், தான், தன் மனைவி திரௌபதி என அனைத்தையும் இழக்கிறான். திரௌபதியை துயிலுரிக்கிறான் துச்சாதனன். கண்ணன் மந்திரத்தால் காப்பாற்றுகிறான். முடிவில் பெரியவர்கள் தலையிட்டு நிலையை மாற்றி, பாண்டவர்கள் 12 ஆண்டுகள் காட்டிலும், ஓராண்டு யாராலும் கண்டுப்பிடிக்க முடியாமலும் நாட்டிலும் இருக்க வேண்டும்; என்று சொல்கின்றனர்.

பாண்டவர்கள் 12 ஆண்டுகள் கழித்து வந்து தங்கள் சொத்துக்களைத் திரும்ப கேட்கின்றனர் கிருக்ஷ்ணர் பாண்டவர்கள் தரப்பில் தூது செல்கிறார். ஆனால் துரியோதனன் ஊசி முனை அளவு நிலம் கூடத் தரமாட்டேன் என்று சொல்லிவிடுகிறான். இதன் விளைவாக மகாபாரதப் போர் குருட்சேத்திரத்தில் நடைபெறுகிறது. போரில் பாண்டவர்கள் வெல்கின்றனர். ஆனால் பேரழிவு ஏற்படுகிறது. இரு தரப்பிலும் கடுமையான உயிர்ச்சேதம். பீக்ஷ்மர், துரோணர் மற்றும் கௌரவர்கள் 100 பேரும் கொல்லப்படுகின்றனர். கர்ணனும்

கொல்லப்படுகிறான். பாண்டவர்கள் ஐவரும் பிழைத்திருந்தாலும் அவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் கொல்லப்படுகின்றனர். இறுதியில் கிருக்ஷ்ணன் அருளால் அர்ஜ{னனின் மகன் அபிமன்யுவின் மனைவி உத்தரையின் வயிற்றில் இருக்கும் கரு ஒன்று மட்டும் உயிர் பிழைக்கிறது. அந்தக் குழந்தைதான் பரிட்சித்து வளர்ந்து பெரியவன் ஆனதும் அவனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு, பாண்டவர்கள் அனைவரும் இமயமலைக்குச் சென்று உயிர் நீர்த்தனர்.

“மகாபாரதக் கதையைக் கொண்டு தெருக்கூத்துக்கள் நடைபெறுகிறது. ஒரு நாளைக்கு ஒரு கதைக்கருவைக் கொண்டு நடைபெறுகிறது.

1. ஆதிபர்வம் அல்லது பாண்டவர் பிறப்பு
2. கிருக்ஷ்ணன் பிறப்பு
3. வில் வளைப்பு
4. திரௌபதி துயில் உரித்தல்
5. குறவஞ்சி கூத்து
6. அர்ச்சுனன் தபசு
7. கர்ணன் சண்டை
8. பதினெட்டாம் நாள் போர்

போன்ற வகைகளில் தெருக்கூத்துக்கள் நடைபெறும்.”[5]

## மகாபாரதம் எனும் காவியத்தில் திரௌபதி

திரௌபதி யாக அக்னியில் பிறந்தவள் என்பதால் யாகசேனி என்றும் அழைப்பர். பாஞ்சால நாட்டு இளவரசி என்பதால் பாஞ்சாலி என்றும் அழைக்கப்பட்டார்.

திரௌபதி, பாஞ்சாலி நாட்டு அரசர் துருபதன் (தந்தை) செய்த யாக அக்னியில் தோன்றியவர். இவருடன் திருட்டத்துயும்னன் எனும் சகோதரனும் யாகத்தீயில் தோன்றினார். திரௌபதி கரிய நிறத்தவள் அழகில் சிறந்தவள்.

திரௌபதியின் சுயம்வரத்தின் போது பாஞ்சால அரசன் துருபதன் விதித்த விதிகளை அர்ச்சுனன் மட்டுமே நிறைவேற்றி (வில் வளைத்தல்) திரௌபதியை சுயம்வரத்தில் வென்றான். ஆனால் தாய் குந்திமாதேவி மகன் அர்ச்சுனன் வென்று கொண்டு வந்தது என்ன என்று கவனிக்காமல் நீங்கள் அனைவரும் அதை பகிர்;ந்து கொள்ளுங்கள் என்று கூற அதன்படி திரௌபதியை

பாண்டவர்கள் மணந்து கொண்டார்கள். தகுந்த விதிகளை நிர்ணயித்து இல்லற வாழ்க்கையை நடத்தினார்கள்.

திரௌபதி அம்மன் திருவிழாவும் தெருக்கூத்தும்

திரௌபதி அம்மன் திருவிழா தொண்டை மண்டலத்தில் குறைந்தபட்சம் 20 நாள்களாவது நடைபெறும். 20 நாள்களும் பாரத பிரசங்கியார் பாரதக் கதையைப் படிப்பார். படித்ததை விளக்கிக்கூறுவார், இது பாரத விழா என்றும் அழைக்கப்படும். ஒரு சில கிராமங்களில் சகல சமூக சாதி இன மக்களும் இணைந்து செயல்படுவர் பல கிராமங்களில் உயர் சாதியினர் மட்டுமே இத்திருவிழாவினை நடத்துவர் எனினும் திரௌபதி அம்மன் கோயில்களின் உரிமை நிர்வாகம் என்பன பெரும்பான்மை சாதி இன மக்களிடமே இருக்கிறது அவர்கள் விவசாயிகளாக இருப்பர். ஒரு சில கிராமங்களில் தலைவர், கவுன்சிலர் போன்றவர்களும் இருக்கிறார்கள்.

10-ஆம் பார சடங்கில் திரௌபதி வில் வளைப்புடன் கூத்து ஆரம்பமாகும். திரௌபதி அர்சுனனை திருமணம் செய்தல் சடங்கு முறையில் கோயிலில் நடைபெறும். ஏனைய பகுதிகள் தெருக்கூத்து குழுவால் நடித்து காண்பிக்கப்படும்.

13-ஆம் நாள் அர்ச்சுனன் தபசு நடக்கும். ஊரின் பொது இடத்தில் விடியவிடியக் கூத்து நடந்து காலையில் கோயில் முன்னால் நடப்பட்ட மரத்தின் மீது அர்ச்சுனன் ஏறித்தவம் செய்வார். அர்ச்சுனன் தவம் செய்ய ஏறும் மரத்தை குழந்தை பேறு அற்ற பெண்கள் முழுகிக் குளித்துவிட்டுச் சுற்றி நிற்பர். அர்ச்சுனன் மர உச்சியில் நின்று சிவனை நினைத்துப் பாடி வில்வ இலைகளையும், பூக்களையும், பழங்களையும் கீழே சிவனை நினைத்து வீசுவார். அவற்றை இப்பெண்கள் பக்தி சிரத்தையுடன் முந்தானையில் தாங்குவர். அர்ச்சுனன் கீழிறங்கி வந்து சிவனை சந்தித்து மல்யுத்தம் புரிந்து, உண்மை உணர்ந்து பாசுபதாஸ்திரம் பெறும் வரை இந்நிகழ்ச்சி நடைபெறும்.

14-ஆம் நாள் கீசக வதமும், 15-ஆம் நாள் வீராடபர்வமும் நடைபெறும். 16-ஆம் நாள் அரவான் களப்பலி நடைபெறும். இதில் அரவான் சிலையொன்று கோயிலுக்கு முன்னர் செய்து வைக்கப்படும். கூத்து இரவில் முடிந்ததும் காலையில் அரவான் களப்பலி சடங்காகக் கோயில் முன்றலில் நடைபெறும்.

17-ஆம் நாள் கர்ண மோட்சம் தெருக்கூத்து நடைபெறும் 18-ஆம் நாள் துரியோதனன் வதம் இடம்பெறும். இது ‘துரியோதனன் படுகளம்’ என

அழைக்கப்படும் 70 அடி முதல் 80 அடி வரை நீளமான துரியோதனின் சிலை படுக்கை நிலையில் கோயில் முன்னாள் செய்து வைக்கப்படும். காலையில் பிரசங்கியார் 18-ஆம் போரை வருணிக்க துரியோதனனுக்கும் வீமனுக்கம் கூத்து கலைஞர்கள் கோயில் முன்றலில் வசனம் பேசிப் போர் புரிவர். போரில் துரியோதனன் சிலையின் தொடையில் வீமன் அடிக்க அதில் வரும் ரத்தத்தை அனைவரும் தொட்டு எடுப்பர். (அச்சமயம் திரௌபதி சிலையும் அங்கிருக்கும் திரௌபதி துரியோதனின் இரத்தம் தலை தடவிக் கூந்தல் முடிந்ததை மக்கள் மீளச் செய்வர்)

19-ஆம் நாள் தீ மிதித்தல் நடைபெறும். கோயில் முன் தீக்குழி பரப்பி திரௌபதி அம்மனின் சிலையுடன் 5 காப்புகாரரும் தீப்பாய்வர். மக்களும் இதில் கலந்து கொள்வர். 20-ம் நாள் தருமர் பட்டாபிஷேகத்துடன் பாரத விழா முடிவடையும்.

இவ்வகையில் 17-ஆம் நூற்றாண்டில் தெருக்கூத்து ஓர் சடங்கு கூத்து ஆக இருந்துள்ளது. இக்கூத்து மேடையிலும், மேடைக்கு வெளியேயும் நடைபெற்றுள்ளது. திரௌபதி வணக்கம் தமிழ்நாட்டில் வந்தமைக்கும் வீரர் வழிபாட்டுக்கும் சம்பந்தமுண்டு. சாளுக்கியரின் படை எடுப்பினின்று தற்காத்துக்கொள்ள வீர மக்களை திரட்ட பல்லவ மன்னர்கள் திரௌபதி வணக்கத்தை தொண்டை மண்டலத்தில் ஏற்படுத்தினர் என்பது ஒரு சாரார் வாதம்.

விழுப்புரம் மாவட்டப்பகுதியில் உள்ள திரௌபதி அம்மன் கோயில்களில் இச்சடங்கு முறைகள் பிரதேச வேறுபாடுகளைக் கொண்டுள்ளன என சில ஆராய்ச்;சியாளர்கள் கண்ட முடிவாகும். விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சியில் இச்சடங்கு முறைகள் ஆரம்பமாகி அதுவே மற்ற இடங்களுக்கும் பரவியிருக்கலாம் என்பது ஒரு சிலர் கருத்தாக இருக்கிறது.

இஸ்லாமியர் ஆட்சிக்காலத்தில் இந்து மக்கள் அனைவரையும் இணைத்து அவர்களுக்கு எதிராக போரிடவைக்கும் இந்து மன்னர்களிடமிருந்தது. ஆரம்பத்தில் திரௌபதி அம்மன் சடங்காக இருந்த தெருக்கூத்து பின்னாளில் சடங்கு நடைபெறாத காலங்களில் ஊர்மன்றங்களில் பொழுது போக்கிற்காக ஆடும் கூத்தாக மாற்றம் பெற்றது எனலாம்.

## முடிவுரை

தெருக்கூத்தானது தமிழ்நாட்டில் பழங்காலத்திலிருந்தே நிகழ்த்தப்படும் ஒரு கலையாகும். தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளை வெளி உலகிற்கு

பறைசாற்றுகிறது. பொழுது போக்கிற்காக உருவாக்கப்பட்ட கலையென்றாலும் இன்று ஒரு மதத்தைச் சார்ந்தக் கலையாக திகழ்கிறது. கோயில் விழாவில் ஒரு பகுதியாகவும், பக்தியைப் பரப்பும் கருவியாகவும் அமைகின்றது. திரௌபதி அம்மன் கோயில் திருவிழாக்களில் எட்டு நாட்கள் நிகழ்த்தப்படும் கலை தெருக்கூத்து. திரௌபதி அம்மன் கோயில் திருவிழா இல்லையென்றால் தெருக்கூத்தும் இல்லை என்ற நிலையில் உள்ளது. எனவே கேரளாவின் “கதகளி” அவர்கள் எவ்வாறு உலகளாவிய தொன்மைக்கலைச் சான்றாக முன்னிலைப் படுத்துக்கின்றதோ அதுபோல் தமிழர்களின் தொன்மைக்கலைச் சான்றாக தெருக்கூத்து இடம்பெறச் செய்ய வேண்டும். மகாபாரமும் தெருக்கூத்தும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் போல் உள்ளது எனலாம்.

## சான்றெண் விளக்கம்

1. அ. அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து, ப. 24.
2. மேலது., ப. 24.
3. செ. கற்பகம், நாட்டிய நாடகங்களில் பாடலும் ஆடலும், ப. 25.
4. முனைவர். சு. இராசரத்தினம், தெருக்கூத்து, ப. 23.
5. மேலது., ப. 25.

## References

[1] அ. அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து, அமுதன் நூலகம், காரைக்குடி, பதிப்பு-1986.

[2] செ. கற்பகம், நாட்டிய நாடகங்களில் பாடலும் ஆடலும், குகன் பதிப்பகம், பதிப்பு-1995.

[3] முனைவர். சு. இராசரத்தினம், தெருக்கூத்து, காவ்யா வெளியீடு, சென்னை.